2-ம் கட்ட மெட்ரோ ரெயிலுக்கான திட்ட அறிக்கை வெளியீடு

# 'அரசுக்கு சொந்தமான இடங்களை அதிகம் பயன்படுத்த திட்டம்'

## சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் அறிவிப்பு

சென்னை, ஏப்.26-

சென்னையில் செயல்படுத்தப்பட உள்ள 2-ம் கட்ட மெட்ரோ ரெயில் பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை வெளியிடப்பட்டு உள்ளது. அரசுக்கு சொந்தமான இடங்களை அதிகம் பயன்படுத்த முடிவெடுக்கப்பட்டு உள்ளது.

### மெட்ரோ ரெயில் திட்டம்

சென்னையில் முதல் கட்ட மெட்ரோ ரெயில் திட்டத்தை மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்தின. இந்த திட்டத்தில் மத்திய, மாநில அரசுகள் தலா 20 சதவீதமும், மீதம் உள்ள 60 சதவீதத்தை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையும் ஏற்று ஒப்பந்தம் போடப்பட்டு, பணிகள் நிறைவடைந்து உள்ளன.

தற்போது மாதவரம்-கோயம்பேடு-சோழிங்கநல்லூர் பகுதிகளை இணைக்கும் வகையில் 2-வது வழித்தடம் அமைக்கப்பட உள்ளது. குறிப்பாக மாதவரம் – சிறுசேரி சிப்காட், கோயம்பேடு – கலங்கரை விளக்கம், மாதவரம் – சோழிங்கநல்லூர் ஆகிய 3 வழித்தடங்களில் மெட்ரோ ரெயில் திட்டம் அமைக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது.

### அரசு நிலம்

இதில் 119 கிலோ மீட்டர் தூரத்தில் 128 ரெயில் நிலையங்கள் அமைக்கப்பட உள்ளது. 2-ம் கட்ட மெட்ரோ ரெயில் பணிக்காக ரூ.69 ஆயிரத்து 180 கோடி மதிப்பீடு செய்யப்பட்டு உள்ளது. இந்த திட்டத்துக்காக 120.98 ஹெக்டேர் நிலம் தேவைப்படுகிறது. இதில் தனியாருக்கு சொந்தமான 27.19 ஹெக்டேரும், அரசுக்கு சொந்தமான 93.79 ஹெக்டேர் நிலத்தில் இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

முதல் திட்டத்தில் ரெயில் நிலையங்களின் நீளம் 220 மீட்டரில் அமைக்கப்பட்டது. ஆனால் 2-ம் கட்ட திட்டத்தில் ரெயில் நிலையங்கள் 150 மீட்டர் நீளத்தில் அமைக்கப்பட உள்ளது.

அதேபோல் 3 ரெயில்வே பணிமனைகள் அமைக்கப்படுகிறது. குறிப்பாக மாதவரத்தில் 27.8 ஏக்கரிலும், சிப்காட்டில் 4.5 ஹெக்டேரிலும், பூந்தமல்லியில் 15.4 ஹெக்டேர் நிலப்பரப்பிலும் இந்த பணிமனைகள் அமைக்கப்பட உள்ளன. முதல் கட்டமாக 52.1 கிலோ மீட்டர் தூரத்துக்கு பணிகளை தொடங்க முடிவு செய்யப்பட்டு இருக்கிறது. இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மாநில அரசு ஒப்புதல் அளித்து வெளியிடப்பட்டு உள்ளது. விரைவில் மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்ட உடன் இந்த ஆண்டு இறுதிக்குள் பணிகள் தொடங்கப்பட உள்ளன.

### ஜப்பான் நிபந்தனை

இந்தநிலையில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையிடம் தமிழக அரசு நேரடியாக ஒப்பந்தம் போட்டு உள்ளது. அதன்படி 2-வது திட்டத்திற்கு ரூ.20 ஆயிரத்து 196 கோடி கடன் உதவி செய்ய ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை முன்வந்துள்ளது. அதில் முதல் கட்டமாக ரூ.4 ஆயிரத்து 770 கோடியை வழங்க ஒப்பந்தம் செய்யப்பட்டு உள்ளது.

அத்துடன், மெட்ரோ ரெயில் பணிக்கான அனைத்து பொருட்களையும் தங்களிடமே வாங்க வேண்டும் என்று ஜப்பான் நிறுவனம் மாநில அரசுக்கு நிபந்தனை விதித்து உள்ளது. மத்திய அரசு 20 சதவீதம் பங்களிப்பு செலுத்தவில்லை என்றால் அதுவும் மாநில அரசுக்கு சுமையாக வந்து சேரும் என்று மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் கூறுகின்றனர்.